Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.4**

| | | | |
|---|---|---|---|
| Name: | இளவரசன் | Calling: | மாணவர் |
| Father's/Husband's Name: | வேல் | Religion: | |
| Village: | நஞ்சிகொண்டாபுரம் | Age: | 22 |
| Taluk: | வேலூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 08.05.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா.4 முதன்மை விசாரணை

ஆஜர் எதிரியை தெரியும். தேதி நினைவில்லை, சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சந்தோஷ், நான், ராகுல், கௌதம், அரவிந்த் ஆகிய ஐவரும் ஏலகிரி செல்வதற்காக காரில் வேலூரிலிருந்து சென்றோம். அன்று அதிகாலையில் எழுந்ததால் அசதியில் நான் காரில் தூங்கி விட்டேன். சத்தம் கேட்டு காரில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது வளையாம்பட்டு என போர்டில் எழுதியிருந்தது. கார் ரோட்டை விட்டு வெளியே வந்து விபத்து ஆகியிருந்தது. காரில் பயணித்த அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. காரை ஓட்டிய ஓட்டுநரை பார்க்க அவரை காணவில்லை. எனக்கு காலில் அடிப்பட்டது. எதிரே சைக்கிளில் வந்திருந்த மூன்று குழந்தைகள் அடிப்பட்டிருந்தார்கள். அதன்பிறகு நான் மயக்கமாகிவிட்டேன். விழித்து பார்த்தபோது நான் காரில் அமர்ந்திருந்தேன். நாங்கள் வந்த காரை யாரோ ஓட்டுநர் ஓட்டினர். எனக்கு தற்போது யார் என்று நினைவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 28.02.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு Miyles KA 03 AF 0194 என்ற காரை நண்பர்களுடன் ஆஜர் எதிரி ஓட்ட சென்னை டூ பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தோமா என்றால் இல்லை. சுமார் 08.45 மணியளவில் கிரிசமுத்திரம் கூட்ரோட்டை தாண்டி எங்கள் வாகனத்திற்கு முன்பு ஒரு இருசக்கர வாகனம் சென்றதால் ஆஜர் எதிரி நாங்கள் வந்த காலை வலது புற லைனில் செலுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. அங்கு லாரி இருந்ததால் வாகனத்தை இடது புறமாக திருப்பி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சாலையின் இடது புறத்தில் இருந்த தடுப்பு சுவரில் மோதி இரண்டு சைக்கிள்களில் பள்ளிக்கு சென்ற மூன்று சிறுவர்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த 3 குழந்தைகளும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர் என்பது எனக்கு தெரியுமா என்றால் வெளியே வந்தபோது பார்த்தேன். போலிஸ் விசாரணையில் ஆஜர் எதிரியின் கவனக்குறைவாலும், அதிவேகத்தினால் தான் விபத்து ஏற்பட்டதாகவும், நான் அதை நேரில் பார்த்ததாகவும் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரி என் உடன் பயின்ற கல்லூரி மாணவர் என்பதால் அவரது வேண்டுகோளுக்கு இணங்க எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

இவ்வழக்கு சம்மந்தமான எந்த விவரமும் எனக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தெரியாது என்றால் சரிதான். இவ்விபத்தில் யார் யாருக்கு அடிப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரிதான், நான் மயக்க நிலையில் இருந்தேன். போலிசார் சொன்னதின்பேரில் தான் அங்கு 3 குழந்தைகள் இறந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி என்னுடன் கல்லூரியில் படித்தவர் என்பதால் என்னை யாரும் சாட்சியம் அளிக்க கட்டாயப்படுத்தவில்லை என்றால் சரிதான். வழக்கு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்

(ஒம்.) இளவரசன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.5**

| | | | |
|---|---|---|---|
| Name: | ராகுல் | Calling: | மாணவர் |
| Father's/Husband's Name: | ஸ்டாலின் | Religion: | |
| Village: | கே.வி.குப்பம் | Age: | 22 |
| Taluk: | காட்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 08.05.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா.5 முதன்மை விசாரணை

ஆஜர் எதிரியை தெரியும். தேதி நினைவில்லை, சுமார் 2 வருடங்களுக்கு முன்பு பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் சந்தோஷ், நான், இளவரசன், கௌதம், அரவிந்த் ஆகிய ஐவரும் ஏலகிரி செல்வதற்காக காலை 08.00 மணியளவில் காரில் வேலூரிலிருந்து சென்றோம். பள்ளிகொண்டா தாண்டியதும் நான் தூங்கி விட்டேன். கார் உருண்ட சத்தம் கேட்டது. எனக்கு இடது நெற்றியில் அடிப்பட்டது. அதனால் மயக்கம் ஏற்பட்டது. பின் நான் மயக்கம் தெளிந்து பார்த்தபோது காவல் நிலையத்தில் இருந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 28.02.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு Miyles KA 03 AF 0194 என்ற காரை நண்பர்களுடன் ஆஜர் எதிரி ஓட்ட சென்னை டூ பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தோமா என்றால் இல்லை. சுமார் 08.45 மணியளவில் கிரிசமுத்திரம் கூட்ரோட்டை தாண்டி எங்கள் வாகனத்திற்கு முன்பு ஒரு இருசக்கர வாகனம் சென்றதால் ஆஜர் எதிரி நாங்கள் வந்த காலை வலது புற

லைனில் செலுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. அங்கு லாரி இருந்ததால் வாகனத்தை இடது புறமாக திருப்பி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சாலையின் இடது புறத்தில் இருந்த தடுப்பு சுவரில் மோதி இரண்டு சைக்கிள்களில் பள்ளிக்கு சென்ற மூன்று சிறுவர்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த 3 குழந்தைகளும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர் என்பது எனக்கு தெரியுமா என்றால் வெளியே வந்தபோது பார்த்தேன். போலிஸ் விசாரணையில் ஆஜர் எதிரியின் கவனக்குறைவாலும், அதிவேகத்தினால் தான் விபத்து ஏற்பட்டதாகவும், நான் அதை நேரில் பார்த்ததாகவும் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரி என் உடன் பயின்ற கல்லூரி மாணவர் என்பதால் அவரது வேண்டுகோளுக்கு இணங்க எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

இவ்வழக்கு சம்மந்தமான எந்த விவரமும் எனக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தெரியாது என்றால் சரிதான். இவ்விபத்தில் யார் யாருக்கு அடிப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரிதான், நான் மயக்க நிலையில் இருந்தேன். போலிசார் சொன்னதின்பேரில் தான் அங்கு 3 குழந்தைகள் இறந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி என்னுடன் கல்லூரியில் படித்தவர் என்பதால் என்னை யாரும் சாட்சியம் அளிக்க கட்டாயப்படுத்தவில்லை என்றால் சரிதான். நாங்கள் சென்ற காரை யார் ஓட்டியது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த காரை ஓட்டிய ஓட்டுநர் நான் மயக்கம் தெளிந்து பார்த்தபோது அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். வழக்கு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ராகுல்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K